# Thirukkural-Relevance to Everyday Life

## அதிகாரம்: புறங்கூறாமை

## Chapter: Not Backbiting

**English Couplet 181:**

**Though virtuous words his lips speak not, and all his deeds are ill.**
**If neighbour he defame not, there's good within him still.**

**Couplet Explanation:**

Though one do not even speak of virtue and live in sin, it will be well if it be said of him "he does not backbite".

**குறள் 181:**

**அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்**
**புறங்கூறான் என்றல் இனிது.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவன் அறத்தைப் போற்றிக் கூறாதவனாய் அறமல்லாதவற்றைச் செய்தாலும், மற்றவனைப் பற்றிப் புறங்கூறாமல் இருக்கிறான் என்று சொல்லப்படுதல் நல்லது.

**English Couplet 182:**

**Than he who virtue scorns, and evil deeds performs, more vile,**
**Is he that slanders friend, then meets him with false smile.**

**Couplet Explanation:**

To smile deceitfully (in another's presence) after having reviled him to his destruction (behind his back) is a greater evil than the commission of (every other) sin and the destruction of (every) virtue.

**குறள் 182:**

**அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே**
**புறனழீஇப் பொய்த்து நகை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அறத்தை அழித்துப் பேசி அறமல்லாதவைகளைச் செய்வதை விட , ஒருவன் இல்லாதவிடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் பொய்யாக முகமலர்ந்து பேசுதல் தீமையாகும்.

**English Couplet 183:**

**'Tis greater gain of virtuous good for man to die,**

**Than live to slander absent friend, and falsely praise when nigh.**

**Couplet Explanation:**

Death rather than life will confer upon the deceitful backbiter the profit which (the treatises on) virtue point out.

**குறள் 183:**

**புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்**

**அறங்கூற்றும் ஆக்கத் தரும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர் வாழ்தலை விட , அவ்வாறு செய்யாமல் வறுமையுற்று இறந்து விடுதல், அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும்.

**English Couplet 184:**

**In presence though unkindly words you speak, say not**

**In absence words whose ill result exceeds your thought.**

**Couplet Explanation:**

Though you speak without kindness before another's face speak not in his absence words which regard not the evil subsequently resulting from it.

**குறள் 184:**

**கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க**

**முன்னின்று பின்நோக்காச் சொல்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

எதிரே நின்று கண்ணோட்டம் இல்லாமல் கடுமையாகச் சொன்னாலும் சொல்லலாம்; நேரில் இல்லாதபோது பின் விளைவை ஆராயாத சொல்லைச் சொல்லக்கூடாது.

**English Couplet 185:**

**The slanderous meanness that an absent friend defames,**

**'This man in words owns virtue, not in heart,' proclaims.**

**Couplet Explanation:**

The emptiness of that man's mind who (merely) praises virtue will be seen from the meanness of reviling another behind his back.

**குறள் 185:**

**அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்**
**புன்மையாற் காணப் படும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அறத்தை நல்லதென்று போற்றும் நெஞ்சம் இல்லாததன்மை , ஒருவன் மற்றவனைப் பற்றிப் புறங்கூறுகின்ற சிறுமையால் காணப்படும்.

**English Couplet 186:**

**Who on his neighbours' sins delights to dwell,**
**The story of his sins, culled out with care, the world will tell.**

**Couplet Explanation:**

The character of the faults of that man who publishes abroad the faults of others will be sought out and published

**குறள் 186:**

**பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்**
**திறன்தெரிந்து கூறப் படும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மற்றவனைப் பற்றிப் புறங்கூறுகின்றவன் , அவனுடைய பழிகள் பலவற்றிலும் நோகத்தக்கவை ஆராய்ந்து கூறிப் பிறரால் பழிக்கப்படுவான்.

**English Couplet 187:**

**With friendly art who know not pleasant words to say,**
**Speak words that sever hearts, and drive choice friends away.**

**Couplet Explanation:**

Those who know not to live in friendship with amusing conversation will by back-biting estrange even their relatives.

**குறள் 187:**

**பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி**
**நட்பாடல் தேற்றா தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மகிழும்படியாகப் பேசி நட்புக் கொள்ளுதல் நன்மை என்று தெளியாதவர் தம்மை விட்டு நீங்கும்படியாகப் புறம் கூறி நண்பரையும் பிரித்து விடுவர்.

**English Couplet 188:**

**Whose nature bids them faults of closest friends proclaim**

**What mercy will they show to other men's good name?**

**Couplet Explanation:**

What will those not do to strangers whose nature leads them to publish abroad the faults of their intimate friends?

**குறள் 188:**

**துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்**

**என்னைகொல் ஏதிலார் மாட்டு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நெருங்கிப் பழகியவரின் குற்றத்தையும் புறங்கூறித் தூற்றும் இயல்புடையவர் , பழகாத அயலாரிடத்து என்ன செய்வாரோ?.

**English Couplet 189:**

**'Tis charity, I ween, that makes the earth sustain their load.**

**Who, neighbours' absence watching, tales or slander tell abroad.**

**Couplet Explanation:**

The world through charity supports the weight of those who reproach others observing their absence.

**குறள் 189:**

**அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்**

**புன்சொல் உரைப்பான் பொறை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவர் நேரில் இல்லாதது கண்டு பழிச்சொல் கூறுவோனுடைய உடல் பாரத்தை, இவனையும் சுமப்பதே எனக்கு அறம் என்று கருதி நிலம் சுமக்கின்றதோ?.

**English Couplet 190:**

**If each his own, as neighbours' faults would scan,**

**Could any evil hap to living man?**

**Couplet Explanation:**

If they observed their own faults as they observe the faults of others, would any evil happen to men?

**குறள் 190:**

**ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்**
**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அயலாருடைய குற்றத்தைக் காண்பது போல் தம் குற்றத்தையும் காண வல்லவரானால், நிலைபெற்ற உயிர் வாழ்க்கைக்குத் துன்பம் உண்டோ?

**அதிகாரம்:ஈகை**

**Chapter:Giving**

**English Couplet 221:**

**Call that a gift to needy men thou dost dispense,**
**All else is void of good, seeking for recompense.**

**Couplet Explanation:**

To give to the destitute is true charity. All other gifts have the nature of (what is done for) a measured return.

**குறள் 221:**

**வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்**
**குறியெதிர்ப்பை நீர துடைத்து.**

**மு.வரதராசன் விளக்கம்:**

வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்து கொடுக்கும் தன்மை உடையது.

**English Couplet 222:**

**Though men declare it heavenward path, yet to receive is ill;**
**Though upper heaven were not, to give is virtue still.**

**Couplet Explanation:**

To beg is evil, even though it were said that it is a good path (to heaven). To give is good, even though it were said that those who do so cannot obtain heaven.

**குறள் 222:**

**நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்**
**இல்லெனினும் ஈதலே நன்று.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் கொள்ளல் தீமையானது, மேலுலகம் இல்லை என்றாலும் பிறக்குக் கொடுப்பதே சிறந்தது.

**English Couplet 223:**

**'I've nought' is ne'er the high-born man's reply;**
**He gives to those who raise themselves that cry.**

**Couplet Explanation:**

(Even in a low state) not to adopt the mean expedient of saying "I have nothing," but to give, is the characteristic of the mad of noble birth.

**குறள் 223:**

**இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்**
**குலனுடையான் கண்ணே யுள.**

**மு.வரதராசன் விளக்கம்:**

யான் வறியவன் என்னும் துன்பச் சொல்லை ஒருவன் உரைப்பதற்கு முன் அவனுக்கு கொடுக்கும் தன்மை, நல்ல குடி பிறப்பு உடையவனிடம் உண்டு.

**English Couplet 224:**

**The suppliants' cry for aid yields scant delight,**
**Until you see his face with grateful gladness bright.**

**Couplet Explanation:**

To see men begging from us in disagreeable, until we see their pleasant countenance.

**குறள் 224:**

**இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்**
**இன்முகங் காணும் அளவு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பொருள் வேண்டும் என்ற இரந்தவரின் மகிழ்ந்த முகத்தைக் காணும் வரைக்கும் (இரத்தலைப் போலவே) இரந்து கேட்கப்படுவதும் துன்பமானது.

**English Couplet 225:**

**'Mid devotees they're great who hunger's pangs sustain,**
**Who hunger's pangs relieve a higher merit gain.**

**Couplet Explanation:**

The power of those who perform penance is the power of enduring hunger. It is inferior to the power of those who remove the hunger (of others).

**குறள் 225:**

**ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தவ வலிமை உடையவரின் வலிமை பசியை பொறுத்துக் கொள்ளலாகும் , அதுவும் அப் பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதாகும்.

**English Couplet 226:**

**Let man relieve the wasting hunger men endure;**
**For treasure gained thus finds he treasure-house secure.**

**Couplet Explanation:**

The removal of the killing hunger of the poor is the place for one to lay up his wealth.

**குறள் 226:**

**அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்**
**பெற்றான் பொருள்வைப் புழி.**

**மு.வரதராசன் விளக்கம்:**

வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும் அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப் பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

**English Couplet 227:**

**Whose soul delights with hungry men to share his meal,**
**The hand of hunger's sickness sore shall never feel.**

**Couplet Explanation:**

The fiery disease of hunger shall never touch him who habitually distributes his food to others.

**குறள் 227:**

**பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்**
**தீப்பிணி தீண்டல் அரிது.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தான் பெற்ற உணவை பலரோடும் பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவனை பசி என்று கூறப்படும் தீயநோய் அணுகுதல் இல்லை.

**English Couplet 228:**

**Delight of glad'ning human hearts with gifts do they not know.**
**Men of unpitying eye, who hoard their wealth and lose it so?**

**Couplet Explanation:**

Do the hard-eyed who lay up and lose their possessions not know the happiness which springs from the pleasure of giving?

**குறள் 228:**

**ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை**
**வைத்திழக்கும் வன்க ணவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தாம் சேர்த்து வைத்துள்ள பொருளைப் பிறருக்குக் கொடுக்காமல் வைத்திருந்து பின் இழந்து விடும் வன் கண்மை உடையவர் , பிறர்க்கு கொடுத்து மகிழும் மகிழ்ச்சியை அறியாரோ.

**English Couplet 229:**

**They keep their garners full, for self alone the board they spread; -**
**'Tis greater pain, be sure, than begging daily bread!.**

**Couplet Explanation:**

Solitary and unshared eating for the sake of filling up one's own riches is certainly much more unpleasant than begging.

**குறள் 229:**

**இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய**
**தாமே தமியர் உணல்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பொருளின் குறைபாட்டை நிரப்புவதற்க்காக உள்ளதைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தமியராய் உண்பது வறுமையால் இறப்பதை விடத் துன்பமானது.

**English Couplet 230:**

**'Tis bitter pain to die, 'Tis worse to live.**
**For him who nothing finds to give!.**

**Couplet Explanation:**

Nothing is more unpleasant than death: yet even that is pleasant where charity cannot be exercised.

**குறள் 230:**

**சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்**
**ஈதல் இயையாக் கடை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சாவதை விடத் துன்பமானது வேறொன்றும் இல்லை , ஆனால் வறியவர்க்கு ஒரு பொருள் கொடுக்க முடியாதநிலை வந்தபோது அச் சாதலும் இனியதே ஆகும்.

**அதிகாரம்: கல்வி**

**Chapter: Learning**

**English Couplet 391:**

**So learn that you may full and faultless learning gain,**
**Then in obedience meet to lessons learnt remain.**

**Couplet Explanation:**

Let a man learn thoroughly whatever he may learn, and let his conduct be worthy of his learning.

**குறள் 391:**

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்வி கற்க நல்ல நூல்களைக் குற்றமறக் கற்க வேண்டும் , அவ்வாறு கற்ற பிறகு, கற்ற கல்விக்கு தக்கவாறு நெறியில் நிற்க வேண்டும்.

**English Couplet 392:**

**The twain that lore of numbers and of letters give**

**Are eyes, the wise declare, to all on earth that live.**

**Couplet Explanation:**

Letters and numbers are the two eyes of man.

**குறள் 392:**

**எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**

**கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

எண் என்று சொல்லப்படுவன எழுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இரு வகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர்.

**English Couplet 393:**

**Men who learning gain have eyes, men say;**

**Blockheads' faces pairs of sores display.**

**Couplet Explanation:**

The learned are said to have eyes, but the unlearned have (merely) two sores in their face.

**குறள் 393:**

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**

**புண்ணுடையர் கல்லா தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கண்ணுடையவர் என்றுக் கூறப்படுபவர் கற்றவரே , கல்லாதவர் முகத்தில் இரண்டுப் புண் உடையவர் ஆவார்.

**English Couplet 394:**

**You meet with joy, with pleasant thought you part;**

**Such is the learned scholar's wonderous art!.**

**Couplet Explanation:**

It is the part of the learned to give joy to those whom they meet, and on leaving, to make them think (Oh! when shall we meet them again).

**குறள் 394:**

**உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்**
**அனைத்தே புலவர் தொழில்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மகிழும் படியாகக் கூடிபழகி (இனி இவரை எப்போது காண்போம் என்று) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும்.

**English Couplet 395:**

**With soul submission they stand, as paupers front a rich man's face;**
**Yet learned men are first; unlearned stand in lowest place.**

**Couplet Explanation:**

The unlearned are inferior to the learned, before whom they stand begging, as the destitute before the wealthy.

**குறள் 395:**

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்**
**கடையரே கல்லா தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

செல்வர் முன் வறியவர் நிற்பது போல் (கற்றவர்முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்விக் கற்றவரே உயர்ந்தவர், கல்லாதவர் இழிந்தவர்

**English Couplet 396:**

**In sandy soil, when deep you delve, you reach the springs below;**
**The more you learn, the freer streams of wisdom flow.**

**Couplet Explanation:**

Water will flow from a well in the sand in proportion to the depth to which it is dug, and knowledge will flow from a man in proportion to his learning.

**குறள் 396:**

**தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
**கற்றனைத் தூறும் அறிவு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்க்கு நீர் ஊறும் , அதுபோல் மக்களின் கற்றக் கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்.

**English Couplet 397:**

**The learned make each land their own, in every city find a home;**
**Who, till they die; learn nought, along what weary ways they roam!.**

**Couplet Explanation:**

How is it that any one can remain without learning, even to his death, when (to the learned man) every country is his own (country), and every town his own (town)?.

**குறள் 397:**

**யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்**
**சாந்துணையுங் கல்லாத வாறு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கற்றவனுக்கு தன் நாடும் ஊரும் போல வேறு எதுவாயினும் நாடாகும் , ஊராகும் ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்.

**English Couplet 398:**

**The man who store of learning gains,**
**In one, through seven worlds, bliss attains.**

**Couplet Explanation:**

The learning, which a man has acquired in one birth, will yield him pleasure during seven births.

**குறள் 398:**

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் அவனுக்கு ஏழுபிறப்பிறப்பிலும் உதவும் தன்மை உடையது.

**English Couplet 399:**

**Their joy is joy of all the world, they see; thus more**
**The learners learn to love their cherished lore.**

**Couplet Explanation:**

The learned will long (for more learning), when they see that while it gives pleasure to themselves, the world also derives pleasure from it.

**குறள் 399:**

**தாமின் புறுவது உலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் (அக் கல்வியையே) விரும்புவர்.

**English Couplet 400:**

**Learning is excellence of wealth that none destroy;**
**To man nought else affords reality of joy.**

**Couplet Explanation:**

Learning is the true imperishable riches; all other things are not riches.

**குறள் 400:**

**கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும் , கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் (அத்தகைய சிறப்புடைய) செல்வம் அல்ல.

**அதிகாரம் : கல்லாமை**

**Chapter: Ignorance**

**English Couplet 401:**

**Like those at draughts would play without the chequered square,**
**Men void of ample lore would counsels of the learned share.**

**Couplet Explanation:**

To speak in an assembly (of the learned) without fullness of knowledge, is like playing at chess (on a board) without squares.

**குறள் 401:**

**அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய**
**நூலின்றிக் கோட்டி கொளல்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அறிவு நிரம்புவதற்குக் காரணமானக் நூல்களைக் கற்காமல் கற்றவரிடம் சென்று பேசதல் , சூதாடும் அரங்கு இழைக்காமல் வட்டுக்காயை உருட்டிஆடினார் போன்றது.

**English Couplet 402:**

**Like those who doat on hoyden's undeveloped charms are they,**
**Of learning void, who eagerly their power of words display.**

**Couplet Explanation:**

The desire of the unlearned to speak (in an assembly), is like a woman without breasts desiring (the enjoyment of) woman-hood.

**குறள் 402:**

**கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்**
**இல்லாதாள் பெண்காமுற்றற்று.**

**மு.வரதராசன் விளக்கம்:**

எண் (கற்றவரின் அவையில்) கல்லாதவன் ஒன்றைச் சொல்ல விரும்புதல் , முலை இரண்டும் இல்லாதவள் பெண் தன்மையை விரும்பினாற் போன்றது.

**English Couplet 403:**

**The blockheads, too, may men of worth appear,**
**If they can keep from speaking where the learned hear!.**

**Couplet Explanation:**

The unlearned also are very excellent men, if they know how to keep silence before the learned.

**குறள் 403:**

**கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்**
**சொல்லா திருக்கப் பெறின்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கற்றவரின் முன்னிலையில் ஒன்றையும் சொல்லாமல் அமைதியாக இருக்கப் பெற்றால் கல்லாதவர்களும் மிகவும் நல்லவரே ஆவார்.

**English Couplet 404:**

**From blockheads' lips, when words of wisdom glibly flow,**
**The wise receive them not, though good they seem to show.**

**Couplet Explanation:**

Although the natural knowledge of an unlearned man may be very good, the wise will not accept for true knowledge.

**குறள் 404:**

**கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்**
**கொள்ளார் அறிவுடை யார்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்லாதவனுடைய அறிவுடைய ஒருக்கால் மிக நன்றாக இருந்தாலும் அறிவுடையோர் அதனை அறிவின் பகுதியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்.

**English Couplet 405:**

**As worthless shows the worth of man unlearned,**
**When council meets, by words he speaks discerned.**

**Couplet Explanation:**

The self-conceit of an unlearned man will fade away, as soon as he speaks in an assembly (of the learned).

**குறள் 405:**

**கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து**
**சொல்லாடச் சோர்வு படும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்லாதவன் ஒருவன் தன்னைத்தான் மகிழ்ந்து பேசும் மதிப்பு (கற்றவரிடம்) கூடிபேசும் போது அப்பேசினால் கெடும்.

**English Couplet 406:**

**'They are': so much is true of men untaught;**
**But, like a barren field, they yield us nought!.**

**Couplet Explanation:**

The unlearned are like worthless barren land: all that can be said of them is, that they exist.

**குறள் 406:**

**உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்**
**களரனையர் கல்லா தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்லாதவர் உயிரோடிருக்கின்றனர் என்று சொல்லப்படும் அளவினரே அல்லாமல் ஒன்றும் விளையாத களர் நிலத்திற்கு ஒப்பாவர்.

**English Couplet 407:**

**Who lack the power of subtle, large, and penetrating sense,**
**Like puppet, decked with ornaments of clay, their beauty's vain pretence.**

**Couplet Explanation:**

The beauty and goodness of one who is destitute of knowledge by the study of great and exquisite works, is like (the beauty and goodness) of a painted earthen doll.

**குறள் 407:**

**நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மாண் புனைபாவை யற்று.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நுட்பமானதாய் மாட்சியுடையதாய் ஆராய வல்லவான அறிவு இல்லாதவனுடைய எழுச்சியான அழகு மண்ணால் சிறப்பாகப் புனையப்பட்ட பாவை போன்றது.

**English Couplet 408:**

**To men unlearned, from fortune's favour greater-evil springs**
**Than poverty to men of goodly wisdom brings.**

**Couplet Explanation:**

Wealth, gained by the unlearned, will give more sorrow than the poverty which may come upon the learned.

**குறள் 408:**

**நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே**
**கல்லார்கண் பட்ட திரு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்லாதவனிடம் சேர்ந்துள்ள செல்வமானது , கற்றறிந்த நல்லவரிடம் உள்ள வறுமையைவிட மிகத்துன்பம் செய்வதாகும்.

**English Couplet 409:**

**Lower are men unlearned, though noble be their race,**

**Than low-born men adorned with learning's grace.**

**Couplet Explanation:**

The unlearned, though born in a high caste, are not equal in dignity to the learned; though they may have been born in a low caste.

**குறள் 409:**

**மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**

**கற்றார் அனைத்திலர் பாடு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்லாதவர் உயர்ந்த குடியில் பிறந்தவராக இருப்பினும் தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும் கல்விக் கற்றவரைப் போன்ற பெருமை இல்லாதவரே.

**English Couplet 410:**

**Learning's irradiating grace who gain,**

**Others excel, as men the bestial train.**

**Couplet Explanation:**

As beasts by the side of men, so are other men by the side of those who are learned in celebrated works.

**குறள் 410:**

**விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்**

**கற்றாரோடு ஏனை யவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அறிவு விளங்குதற்குக் காரணமான நூல்களைக் கற்றவரோடுக் கல்லாதவர் , மக்களோடு விலங்குகளுக்கு உள்ள அவ்வளவு வேற்றுமை உடையவர்.

**அதிகாரம்: கேள்வி**

**Chapter:Hearing**

**English Couplet 411:**

**Wealth of wealth is wealth acquired be ear attent;**

**Wealth mid all wealth supremely excellent.**

**Couplet Explanation:**

Wealth (gained) by the ear is wealth of wealth; that wealth is the chief of all wealth.

**குறள் 411:**

**செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்**

**செல்வத்து ளெல்லாந் தலை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

செவியால் கேட்டறியும் செல்வம் , செல்வங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் செல்வமாகும், அச் செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும்.

**English Couplet 412:**

**When 'tis no longer time the listening ear to feed**

**With trifling dole of food supply the body's need.**

**Couplet Explanation:**

When there is no food for the ear, give a little also to the stomach.

**குறள் 412:**

**செவுக்குண வில்லாத போழ்து சிறிது**

**வயிற்றுக்கும் ஈயப் படும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

செவிக்கு கேள்வியாகிய உணவு இல்லாத போது (அதற்க்கு துணையாக உடலை ஒப்புமாறு) வயிற்றுக்கும் சிறிது உணவு தரப்படும்.

**English Couplet 413:**

**Who feed their ear with learned teachings rare,**

**Are like the happy gods oblations rich who share.**

**Couplet Explanation:**

Those who in this world enjoy instruction which is the food of the ear, are equal to the Gods, who enjoy the food of the sacrifices.

**குறள் 413:**

**செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்**

**ஆன்றாரோ டொப்பர் நிலத்து.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கற்றவரின் செவியுணவாகிய கேள்வி உடையவர் நிலத்தில் வாழ்கின்றவரே ஆயினும் அவி உணவைக் கொள்ளும் தேவரோடு ஒப்பாவார்.

**English Couplet 414:**

**Though learning none hath he, yet let him hear always:**

**In weakness this shall prove a staff and stay.**

**Couplet Explanation:**

Although a man be without learning, let him listen (to the teaching of the learned); that will be to him a staff in adversity.

**குறள் 414:**

**கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு**

**ஒற்கத்தின் ஊற்றாந் துணை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நூல்களைக் கற்றவில்லையாயினும், கற்றறிந்தவர்களிடம் கேட்டறிய வேண்டும், அது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்த போது ஊன்றுகோல் போல் துணையாகும்.

**English Couplet 415:**

**Like staff in hand of him in slippery ground who strays**

**Are words from mouth of those who walk in righteous ways.**

**Couplet Explanation:**

The words of the good are like a staff in a slippery place.

**குறள் 415:**

**இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே**

**ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கல்லாதவன் ஒழுக்கமுடைய சான்றோரின் வாய்ச் சொற்கள், வழுக்கல் உடைய சேற்று நிலத்தில் ஊன்றுகோல் போல் வாழ்க்கையில் உதவும்.

**English Couplet 416:**

**Let each man good things learn, for e'en as he**
**Shall learn, he gains increase of perfect dignity.**

**Couplet Explanation:**

Let a man listen, never so little, to good (instruction), even that will bring him great dignity.

**குறள் 416:**

**எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்**
**ஆன்ற பெருமை தரும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

எவ்வளவு சிறிதே ஆயினும் நல்லவற்றைக் கேட்டறிய வேண்டும் , கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும்.

**English Couplet 417:**

**Not e'en through inadvertence speak they foolish word,**
**With clear discerning mind who've learning's ample lessons heard.**

**Couplet Explanation:**

Not even when they have imperfectly understood (a matter), will those men speak foolishly, who have profoundly studied and diligently listened (to instruction).

**குறள் 417:**

**பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்**
**தீண்டிய கேள்வி யவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நுட்பமாக உணர்ந்து நிறைந்த கேள்வியறிவை உடையவர் , (ஒரு கால் பொருள்களைத்) தவறாக உணர்ந்திருந்தாலும் பேதைமையானவற்றைச் சொல்லார்.

**English Couplet 418:**

**Where teaching hath not oped the learner's ear,**
**The man may listen, but he scarce can hear.**

**Couplet Explanation:**

The ear which has not been bored by instruction, although it hears, is deaf.

**குறள் 418:**

**கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்**
**தோட்கப் படாத செவி.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கேள்வியறிவால் துளைக்கப் படாத செவிகள் , (இயற்கையான துளைகள் கொண்டு ஓசையைக்) கேட்டறிந்தாலும் கேளாத செவிட்டுத் தன்மை உடையனவே.

**English Couplet 419:**

**'Tis hard for mouth to utter gentle, modest word,**
**When ears discourse of lore refined have never heard.**

**Couplet Explanation:**

It is a rare thing to find modesty, a reverend mouth- with those who have not received choice instruction.

**குறள் 419:**

**நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய**
**வாயின ராதல் அரிது.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நுட்பமான பொருள்களைக் கேட்டறிந்தவர் அல்லாத மற்றவர் , வணக்கமானச் சொற்களைப் பேசும் வாயினை உடையவராக முடியாது.

**English Couplet 420:**

**His mouth can taste, but ear no taste of joy can give!**
**What matter if he die, or prosperous live?.**

**Couplet Explanation:**

What does it matter whether those men live or die, who can judge of tastes by the mouth, and not by the ear?.

**குறள் 420:**

**செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்**
**அவியினும் வாழினும் என்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

செவியால் கேள்விச் சுவை உணராமல் வாயின் சுவையுணர்வு மட்டும் உடைய மக்கள், இறந்தாலும் என்ன, உயிரோடு வாழ்ந்தாலும் என்ன.

**அதிகாரம்: இடனறிதல்**

**Chapter: Knowing the Place**

**English Couplet 491:**

**Begin no work of war, depise no foe,**

**Till place where you can wholly circumvent you know.**

**Couplet Explanation:**

Let not (a king) despise (an enemy), nor undertake any thing (against him), until he has obtained (a suitable) place for besieging him.

**குறள் 491:**

**தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்**

**இடங்கண்ட பின்அல் லது.**

**மு.வரதராசன் விளக்கம்:**

முற்றுகை செய்வதற்கு ஏற்ற இடத்தைக் கண்டபின் அல்லாமல் எச் செயலையும் தொடங்கக்கூடாது, பகைவரை இகழவும் கூடாது.

**English Couplet 492:**

**Though skill in war combine with courage tried on battle-field,**

**The added gain of fort doth great advantage yield.**

**Couplet Explanation:**

Even to those who are men of power and expedients, an attack in connection with a fortification will yield many advantages.

**குறள் 492:**

**முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்**

**ஆக்கம் பலவுந் தரும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மாறுபாடு பொருந்திய வலிமை உடையவர்க்கும் அரணோடு பொருந்தி ஏற்படுகின்ற வெற்றியானது பல வகைப் பயன்களையும் கொடுக்கும்.

**English Couplet 493:**

**E'en weak ones mightily prevail, if place of strong defence,**

**They find, protect themselves, and work their foes offence.**

**Couplet Explanation:**

Even the powerless will become powerful and conquer, if they select a proper field (of action), and guard themselves, while they make war on their enemies.

**குறள் 493:**

**ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து**
**போற்றார்கண் போற்றிச் செயின்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தக்க இடத்தை அறிந்து தம்மைக் காத்துக் கொண்டு பகைவரிடத்திற் சென்று தம் செயலைச் செய்தால் , வலிமை இல்லாதவறும் வலிமை உடையவராக வெல்வர்.

**English Couplet 494:**

**The foes who thought to triumph, find their thoughts were vain,**
**If hosts advance, seize vantage ground, and thence the fight maintain.**

**Couplet Explanation:**

If they who draw near (to fight) choose a suitable place to approach (their enemy), the latter, will have to relinquish the thought which they once entertained, of conquering them.

**குறள் 494:**

**எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து**
**துன்னியார் துன்னிச் செயின்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தக்க இடத்தை அறிந்து பொருந்தியவராய்ச் செயலைச் செய்வாராயின் , அவரை வெல்ல எண்ணியிருந்த பகைவர் தம் எண்ணத்தை இழந்துவிடுவார்

**English Couplet 495:**

**The crocodile prevails in its own flow of water wide,**
**If this it leaves, 'tis slain by anything beside.**

**Couplet Explanation:**

In deep water, a crocodile will conquer (all other animals); but if it leave the water, other animals will conquer it.

**குறள் 495:**

**நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஆழமுள்ள நீரில் முதலை மற்ற உயிர்களை வெல்லும் , ஆனால் நீரிலிருந்து விலகிவந்தால் அந்த முதலையையும் மற்ற உயிர்கள் வென்றுவிடும்.

**English Couplet 496:**

**The lofty car, with mighty wheel, sails not o'er watery main,**
**The boat that skims the sea, runs not on earth's hard plain.**

**Couplet Explanation:**

Wide chariots, with mighty wheels, will not run on the ocean; neither will ships that the traverse ocean, move on the earth.

**குறள் 496:**

**கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்**
**நாவாயும் ஓடா நிலத்து.**

**மு.வரதராசன் விளக்கம்:**

வலிய சக்கரங்களையுடைய பெரியத் தேர்கள் கடலில் ஓடமுடியாது , கடலில் ஓடுகின்ற கப்பல்களும் நிலத்தில் ஓடமுடியாது.

**English Couplet 497:**

**Save their own fearless might they need no other aid,**
**If in right place they fight, all due provision made.**

**Couplet Explanation:**

You will need no other aid than fearlessness, if you thoroughly reflect (on what you are to do), and select (a suitable) place for your operations.

**குறள் 497:**

**அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை**
**எண்ணி இடத்தால் செயின்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

(செய்யும் வழிவகைகமைக்) குறைவில்லாமல் எண்ணித் தக்க இடத்தில் பொருந்திச் செய்தால் , அஞ்சாமை அல்லாமல் வேறு துணை வேண்டியதில்லை.

**English Couplet 498:**

**If lord of army vast the safe retreat assail**

**Of him whose host is small, his mightiest efforts fail.**

**Couplet Explanation:**

The power of one who has a large army will perish, if he goes into ground where only a small army can act.

**குறள் 498:**

**சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்**

**ஊக்கம் அழிந்து விடும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சிறிய படை உடையவனுக்குத் தக்கதாக உள்ள இடத்தில் பொருந்தி நின்றால் , பெரிய படை உடையவன் தன் ஊக்கம் அழிவான்.

**English Couplet 499:**

**Though fort be none, and store of wealth they lack,**

**'Tis hard a people's homesteads to attack!.**

**Couplet Explanation:**

It is a hazardous thing to attack men in their own country, although they may neither have power nor a good fortress.

**குறள் 499:**

**சிறைநலனும் சீரும் இலரெனினும் மாந்தர்**

**உறைநிலத்தோடு ஒட்டல் அரிது.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அரணாகிய நன்மையும் மற்றச் சிறப்பும் இல்லாதவராயினும் பகைவர் வாழ்கின்ற இடத்திற்குச் சென்று அவரைத் தாக்குதல் அரிது.

**English Couplet 500:**

**The jackal slays, in miry paths of foot-betraying fen,**

**The elephant of fearless eye and tusks transfixing armed men.**

**Couplet Explanation:**

A fox can kill a fearless, warrior-faced elephant, if it go into mud in which its legs sink down.

**குறள் 500:**

**காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா**

**வேலாள் முகத்த களிறு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

வேல் ஏந்திய வீரரைக் கோர்த்தெடுத்த கொம்பு உடைய யானையையும் , கால் ஆழும் சேற்று நில்த்தில் அகப்பட்ட போது நரிகள் கொன்றுவிடும்.

**அதிகாரம்: மடியின்மை**

**Chapter: Unsluggishness**

**English Couplet 601:**

**Of household dignity the lustre beaming bright,**

**Flickers and dies when sluggish foulness dims its light.**

**Couplet Explanation:**

By the darkness, of idleness, the indestructible lamp of family (rank) will be extinguished.

**குறள் 601:**

**குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்**

**மாசூர மாய்ந்து கெடும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவனுக்கு தன் குடியாகிய மங்காத விளக்கு , அவனுடைய சோம்பலாகிய மாசு படிய படிய ஒளி மங்கிக் கெட்டுவிடும்.

**English Couplet 602:**

**Let indolence, the death of effort, die,**

**If you'd uphold your household's dignity.**

**Couplet Explanation:**

Let those, who desire that their family may be illustrious, put away all idleness from their conduct.

**குறள் 602:**

**மடியை மடியா ஒழுகல் குடியைக்**

**குடியாக வேண்டு பவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தம் குடியைச் சிறப்புடைய குடியாக விளங்குமாறு செய்ய விரும்புகின்றவர் சோம்பலைச் சோம்பலாகக் கொண்டு முயற்சியுடையவராய் நடக்க வேண்டும்.

**English Couplet 603:**

**Who fosters indolence within his breast, the silly elf!**
**The house from which he springs shall perish ere himself.**

**Couplet Explanation:**

The (lustre of the) family of the ignorant man, who acts under the influence of destructive laziness will perish, even before he is dead.

**குறள் 603:**

**மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த**
**குடிமடியும் தன்னினும் முந்து.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அழிக்கும் இயல்புடைய சோம்பலைத் தன்னிடம் கொண்டு நடக்கும் அறிவவில்லாதவன் பிறந்த குடி அவனுக்கு முன் அழிந்துவிடும்.

**English Couplet 604:**

**His family decays, and faults unheeded thrive,**
**Who, sunk in sloth, for noble objects doth not strive.**

**Couplet Explanation:**

Family (greatness) will be destroyed, and faults will increase, in those men who give way to laziness, and put forth no dignified exertions.

**குறள் 604:**

**குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து**
**மாண்ட உஞற்றி லவர்க்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சோம்பலில் அகப்பட்டு சிறந்த முயற்சி இல்லாதவராய் வாழ்கின்றவர்க்கு குடியின் பெருமை அழிந்து குற்றம் பெருகும்.

**English Couplet 605:**

**Delay, oblivion, sloth, and sleep: these four**
**Are pleasure-boat to bear the doomed to ruin's shore.**

**Couplet Explanation:**

Procrastination, forgetfulness, idleness, and sleep, these four things, form the vessel which is desired by those destined to destruction.

**குறள் 605:**

**நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்**
**கெடுநீரார் காமக் கலன்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

காலம் நீட்டித்தல் , சோம்பல், மறதி, அளவு மீறியத் தூக்கம் ஆகிய இந் நான்கும் கெடுகின்ற இயல்புடையவர் விரும்பி ஏறும் மரக்கலமாம்.

**English Couplet 606:**

**Though lords of earth unearned possessions gain,**
**The slothful ones no yield of good obtain.**

**Couplet Explanation:**

It is a rare thing for the idle, even when possessed of the riches of kings who ruled over the whole earth, to derive any great benefit from it.

**குறள் 606:**

**படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்**
**மாண்பயன் எய்தல் அரிது.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நாட்டை ஆளும் தலைவருடைய உறவுத் தானே வந்து சேர்ந்தாலும் , சோம்பல் உடையவர் சிறந்த பயனை அடைய முடியாது.

**English Couplet 607:**

**Who hug their sloth, nor noble works attempt,**
**Shall bear reproofs and words of just contempt.**

**Couplet Explanation:**

Those who through idleness, and do not engage themselves in dignified exertion, will subject themselves to rebukes and reproaches.

**குறள் 607:**

**இடிபுரிந்து எள்ளுஞ்சொல் கேட்பர் மடிபுரிந்து**
**மாண்ட உஞற்றி லவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சோம்பலை விரும்பி மேற்க் கொண்டு சிறந்த முயற்சி இல்லாதவராய் வாழ்கின்றவர் பிறர் இடித்துக் கூறி இகழ்கின்ற சொல்லைக் கேட்கும் நிலைமை அடைவர்.

**English Couplet 608:**

**If sloth a dwelling find mid noble family,**

**Bondsmen to them that hate them shall they be.**

**Couplet Explanation:**

If idleness take up its abode in a king of high birth, it will make him a slave of his enemies.

**குறள் 608:**

**மடிமை குடிமைக்கண் தங்கின்தன் ஒன்னார்க்கு**

**அடிமை புகுத்தி விடும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சோம்பல் நல்ல குடியில் பிறந்தவனிடம் வந்து பொருந்தினால் , அஃது அவனை அவனுடைய பகைவர்க்கு அடிமையாகுமாறு செய்துவிடும்.

**English Couplet 609:**

**Who changes slothful habits saves**

**Himself from all that household rule depraves.**

**Couplet Explanation:**

When a man puts away idleness, the reproach which has come upon himself and his family will disappear.

**குறள் 609:**

**குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்**

**மடியாண்மை மாற்றக் கெடும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவன் சோம்பலை ஆளுந் தன்மையை மாற்றிவிட்டால் அவனுடைய குடியிலும் ஆண்மையிலும் வந்தக் குற்றம் தீர்ந்து விடும்.

**English Couplet 610:**

**The king whose life from sluggishness is rid,**

**Shall rule o'er all by foot of mighty god bestrid.**

**Couplet Explanation:**

The king who never gives way to idleness will obtain entire possession of (the whole earth) passed over by him who measured (the worlds) with His foot.

**குறள் 610:**

**மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்**
**தாஅய தெல்லாம் ஒருங்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அடியால் உலகத்தை அளந்த கடவுள் தாவியப் பரப்பு எல்லாவற்றையும் சோம்பல் இல்லாத அரசன் ஒரு சேர அடைவான்.

**அதிகாரம்: இடுக்கணழியாமை**

**Chapter: Hopefulness in Trouble**

**English Couplet 621:**

**Smile, with patient, hopeful heart, in troublous hour;**
**Meet and so vanquish grief; nothing hath equal power.**

**Couplet Explanation:**

If troubles come, laugh; there is nothing like that, to press upon and drive away sorrow.

**குறள் 621:**

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அஃதொப்ப தில்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

துன்பம் வரும்போது (அதற்காக கலங்காமல்) நகுதல் வேண்டும் , அத் துன்பத்தை எதிர்த்து வெல்லவல்லது அதைப் போன்றது வேறு இல்லை.

**English Couplet 622:**

**Though sorrow, like a flood, comes rolling on,**
**When wise men's mind regards it,- it is gone.**

**Couplet Explanation:**

A flood of troubles will be overcome by the (courageous) thought which the minds of the wise will entertain, even in sorrow.

**குறள் 622:**

**வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்**

**உள்ளத்தின் உள்ளக் கெடும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

வெள்ளம் போல் அளவற்றதாய் வரும் துன்பமும் , அறிவுடையவன் தன் உள்ளத்தினால் அத் துன்பத்தின் இயல்பை நினைத்த அளவில் கெடும்.

**English Couplet 623:**

**Who griefs confront with meek, ungrieving heart,**

**From them griefs, put to grief, depart.**

**Couplet Explanation:**

They give sorrow to sorrow, who in sorrow do not suffer sorrow.

**குறள் 623:**

**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**

**இடும்பை படாஅ தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

துன்பம் வந்த போது அதற்க்காக வருந்திக் கலங்காதவர் அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதை வென்று விடுவார்.

**English Couplet 624:**

**Like bullock struggle on through each obstructed way;**

**From such an one will troubles, troubled, roll away.**

**Couplet Explanation:**

Troubles will vanish (i.e., will be troubled) before the man who (struggles against difficulties) as a buffalo (drawing a cart) through deep mire.

**குறள் 624:**

**மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற**

**இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தடைபட்ட இடங்களில் எல்லாம் (வண்டியை இழுத்துச் செல்லும்) எருதுபோல் விடாமுயற்சி உடையவன் உற்றத் துன்பமே துன்பப்படுவதாகும்.

**English Couplet 625:**

**When griefs press on, but fail to crush the patient heart,**

**Then griefs defeated, put to grief, depart.**

**Couplet Explanation:**

The troubles of that man will be troubled (and disappear) who, however thickly they may come upon him, does not abandon (his purpose).

**குறள் 625:**

**அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கட் படும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

விடாமல் மேன் மேலும் துன்பம் வந்தபோதிலும் கலங்காமலிருக்கும் ஆற்றலுடையவன் அடைந்த துன்பமே துன்பப்பட்டு போகும்.

**English Couplet 626:**

**Who boasted not of wealth, nor gave it all their heart,**
**Will not bemoan the loss, when prosperous days depart.**

**Couplet Explanation:**

Will those men ever cry out in sorrow, "we are destitute" who, (in their prosperity), give not way to (undue desire) to keep their wealth.

**குறள் 626:**

**அற்றேமென்று அல்லற் படுபவோ பெற்றேமென்று**
**ஓம்புதல் தேற்றா தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

செல்வம் வந்த போது இதைப்பெற்றோமே என்று பற்றுக்கொண்டு காத்தறியாதவர் வறுமை வந்த போது இழந்தோமே என்று அல்லல்படுவரோ

**English Couplet 627:**

**'Man's frame is sorrow's target', the noble mind reflects,**
**Nor meets with troubled mind the sorrows it expects.**

**Couplet Explanation:**

The great will not regard trouble as trouble, knowing that the body is the butt of trouble.

**குறள் 627:**

**இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்**

**கையாறாக் கொள்ளாதாம் மேல்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மேலோர், உடம்பு துன்பத்திற்கு இலக்கமானது என்று உணர்ந்து , (துன்பம் வந்த போது) கலங்குவதை ஒழுக்க நெறியாகக் கொள்ளமாட்டர்.

**English Couplet 628:**

**He seeks not joy, to sorrow man is born, he knows;**

**Such man will walk unharmed by touch of human woes.**

**Couplet Explanation:**

That man never experiences sorrow, who does not seek for pleasure, and who considers distress to be natural (to man).

**குறள் 628:**

**இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்**

**துன்பம் உறுதல் இலன்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

இன்பமானதை விரும்பாதவனாய்த் துன்பம் இயற்கையானது என்று தெளிந்திருப்பவன், துன்பம் வந்த போது துன்ப முறுவது இல்லை.

**English Couplet 629:**

**Mid joys he yields not heart to joys' control.**

**Mid sorrows, sorrow cannot touch his soul.**

**Couplet Explanation:**

He does not suffer sorrow, in sorrow who does not look for pleasure in pleasure.

**குறள் 629:**

**இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்**

**துன்பம் உறுதல் இலன்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

இன்பம் வந்திக் காலத்தில் அந்த இன்பத்தை விரும்பிப் போற்றாதவன் துன்பம் வந்த காலத்தில் அந்தத் துன்பத்தை அடைவது இல்லை.

**English Couplet 630:**

**Who pain as pleasure takes, he shall acquire**

**The bliss to which his foes in vain aspire.**

**Couplet Explanation:**

The elevation, which even his enemies will esteem, will be gained by him, who regards pain as pleasure.

**குறள் 630:**

**இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்**
**ஒன்னார் விழையுஞ் சிறப்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவன் துன்பத்தையே தனக்கு இன்பமாகக் கருதிக்கொள்வானானால் அவனுடைய பகைவரும் விரும்பத்தக்க சிறப்பு உண்டாகும்.

**அதிகாரம்: நட்பு**

**Chapter: Friendship**

**English Couplet 781:**

**What so hard for men to gain as friendship true?**

**What so sure defence 'gainst all that foe can do?**

**Couplet Explanation:**

What things are there so difficult to acquire as friendship? What guards are there so difficult to break through by the efforts (of one's foes)?

**குறள் 781:**

**செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்**
**வினைக்கரிய யாவுள காப்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நட்பைப்போல் செய்து கொள்வதற்கு அருமையானவை எவை உள்ளன , அதுபோல் தொழிலுக்கு அரிய காவலாக இருப்பவை எவை உள்ளன.

**English Couplet 782:**

**Friendship with men fulfilled of good Waxes like the crescent moon;**

**Friendship with men of foolish mood, Like the full orb, waneth soon.**

**Couplet Explanation:**

The friendship of the wise waxes like the new moon; (but) that of fools wanes like the full moon.

**குறள் 782:**

**நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்**
**பின்னீர பேதையார் நட்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அறிவுடையவரின் நட்பு பிறை நிறைந்து வருதல் போன்ற தன்மையுடையது , அறிவில்லாதவரின் நட்பு முழுமதி தேய்ந்து பின் செல்லுதல் போன்ற தன்மையுடையன.

**English Couplet 783:**

**Learned scroll the more you ponder, Sweeter grows the mental food;**
**So the heart by use grows fonder, Bound in friendship with the good.**

**Couplet Explanation:**

Like learning, the friendship of the noble, the more it is cultivated, the more delightful does it become.

**குறள் 783:**

**நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
**பண்புடை யாளர் தொடர்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பழகப் பழக நற்பண்பு உடையவரின் நட்பு இன்பம் தருதல் , நூலின் நற்பொருள் கற்கக் கற்க மேன்மேலும் இன்பம் தருதலைப் போன்றதாகும்.

**English Couplet 784:**

**Nor for laughter only friendship all the pleasant day,**
**But for strokes of sharp reproving, when from right you stray.**

**Couplet Explanation:**

Friendship is to be practised not for the purpose of laughing but for that of being beforehand in giving one another sharp rebukes in case of transgression.

**குறள் 784:**

**நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்**
**மேற்சென்று இடித்தற் பொருட்டு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நட்புச் செய்தல் ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழும் பொருட்டு அன்று , நண்பர் நெறிக்கடந்து செல்லும் போது முற்ப்பட்டுச் சென்று இடித்துரைப்பதற்காகும்.

**English Couplet 785:**

**Not association constant, not affection's token bind;**

**'Tis the unison of feeling friends unites of kindred mind.**

**Couplet Explanation:**

Living together and holding frequent intercourse are not necessary (for friendship); (mutual) understanding can alone create a claim for it.

**குறள் 785:**

**புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்**

**நட்பாங் கிழமை தரும்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நட்புச் செய்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை , ஒத்த உணர்ச்சியே நட்பு ஏற்படுத்துவதற்கு வேண்டிய உரிமையைக் கொடுக்கும்.

**English Couplet 786:**

**Not the face's smile of welcome shows the friend sincere,**

**But the heart's rejoicing gladness when the friend is near.**

**Couplet Explanation:**

The love that dwells (merely in the smiles of the face is not friendship; (but) that which dwells deep in the smiles of the heart is true friendship.

**குறள் 786:**

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**

**அகநக நட்பது நட்பு**

**மு.வரதராசன் விளக்கம்:**

முகம் மட்டும் மலரும் படியா நட்பு செய்வது நட்பு அன்று , நெஞ்சமும் மலரும் படியாக உள்ளன்பு கொண்டு நட்பு செய்வதே நட்பு ஆகும்.

**English Couplet 787:**

**Friendship from ruin saves, in way of virtue keeps;**

**In troublous time, it weeps with him who weeps.**

**Couplet Explanation:**

(True) friendship turns aside from evil (ways) makes (him) walk in the (good) way, and, in case of loss if shares his sorrow (with him).

**குறள் 787:**

**அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்**

**அல்லல் உழப்பதாம் நட்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அழிவைத் தரும் தீமைகளிலிருந்து நீக்கி , நல்ல வழியில் நடக்கச் செய்து , அழிவுவந்த காலத்தில் உடனிருந்து துன்பப்படுவதே நட்பாகும்.

**English Couplet 788:**

**As hand of him whose vesture slips away,**

**Friendship at once the coming grief will stay.**

**Couplet Explanation:**

(True) friendship hastens to the rescue of the afflicted (as readily) as the hand of one whose garment is loosened (before an assembly).

**குறள் 788:**

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**

**இடுக்கண் களைவதாம் நட்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

உடைநெகிழ்ந்தவனுடைய கை, உடனே உதவிக்காப்பது போல் (நண்பனுக்குத் துன்பம் வந்தால்) அப்போதே சென்று துன்பத்தைக் களைவது நட்பு.

**English Couplet 789:**

**And where is friendship's royal seat? In stable mind,**

**Where friend in every time of need support may find.**

**Couplet Explanation:**

Friendship may be said to be on its throne when it possesses the power of supporting one at all times and under all circumstances, (in the practice or virtue and wealth).

**குறள் 789:**

**நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நட்புக்கு சிறந்த நிலை எது என்றால் , எப்போதும் வேறுபடுதல் இல்லாமல் , முடியும் போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்.

**English Couplet 790:**

**Mean is the friendship that men blazon forth,**
**'He's thus to me' and 'such to him my worth'.**

**Couplet Explanation:**

Though friends may praise one another saying, "He is so intimate with us, and we so much (with him)"; (still) such friendship will appear mean.

**குறள் 790:**

**இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று**
**புனையினும் புல்லென்னும் நட்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

இவர் எமக்கு இத்தன்மையானவர் , யாம் இவர்க்கு இத் தன்மையுடையேம் என்று புனைந்துரைத்தாலும் நட்பு சிறப்பிழந்து விடும்.

**அதிகாரம்: சான்றாண்மை**

**Chapter:Perfectness**

**English Couplet 981:**

**All goodly things are duties to the men, they say**
**Who set themselves to walk in virtue's perfect way.**

**Couplet Explanation:**

It is said that those who are conscious of their duty and behave with a perfect goodness will regard as natural all that is good.

**குறள் 981:**

**கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து**
**சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

கடமை இவை என்று அறிந்து சான்றான்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் இயல்பான கடமை என்று கூறுவர்.

**English Couplet 982:**

**The good of inward excellence they claim,**

**The perfect men; all other good is only good in name.**

**Couplet Explanation:**

The only delight of the perfect is that of their goodness; all other (sensual) delights are not to be included among any (true) delights.

**குறள் 982:**

**குணநலம் சான்றோர் நலனே பிறநலம்**

**எந்நலத்து உள்ளதூஉம் அன்று.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சான்றோரின் நலம் என்று கூறப்படுவது அவருடைய பண்புகளின் நலமே , மற்ற நலம் வேறு எந்த நலத்திலும் சேர்ந்துள்ளதும் அன்று.

**English Couplet 983:**

**Love, modesty, beneficence, benignant grace,**

**With truth, are pillars five of perfect virtue's resting-place.**

**Couplet Explanation:**

Affection, fear (of sin), benevolence, favour and truthfulness; these are the five pillars on which perfect goodness rests.

**குறள் 983:**

**அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு**

**ஐந்துசால் ஊன்றிய தூண்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அன்பு, நாணம்,ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, என்னும் ஐந்து பண்புகளும், சால்பு என்பதைத் தாங்கியுள்ள தூண்களாகும்.

**English Couplet 984:**

**The type of 'penitence' is virtuous good that nothing slays;**

**To speak no ill of other men is perfect virtue's praise.**

**Couplet Explanation:**

Penance consists in the goodness that kills not, and perfection in the goodness that tells not others' faults.

**குறள் 984:**

**கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை**
**சொல்லா நலத்தது சால்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

தவம் ஓர் உயிரையும் கொல்லாத அறத்தை அடிப்படையாகக் கொண்டது , சால்பு பிறருடையத் தீமையை எடுத்துச் சொல்லாத நற்பண்பை அடிப்படையாகக் கொண்டது

**English Couplet 985:**

**Submission is the might of men of mighty acts; the sage**
**With that same weapon stills his foeman's rage.**

**Couplet Explanation:**

Stooping (to inferiors) is the strength of those who can accomplish (an undertaking); and that is the weapon with which the great avert their foes.

**குறள் 985:**

**ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்**
**மாற்றாரை மாற்றும் படை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஆற்றலுடையவரின் ஆற்றலாவது பணிவுடன் நடத்தலாகும் , அது சான்றோர் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றுகின்ற கருவியாகும்.

**English Couplet 986:**

**What is perfection's test? The equal mind.**
**To bear repulse from even meaner men resigned.**

**Couplet Explanation:**

The touch-stone of perfection is to receive a defeat even at the hands of one's inferiors.

**குறள் 986:**

**சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி**
**துலையல்லார் கண்ணும் கொளல்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சால்புக்கு உரைகல் போல் மதிப்பிடும் கருவி எது என்றால் தமக்கு ஒப்பில்லாத தாழ்ந்தோரிடத்திலும்தோல்வியை ஏற்றுக் கொள்ளும் பண்பாகும்

**English Couplet 987:**

**Of what avail is perfect goodness if it cannot do pleasing things even to those who have pained (it)?**

**Couplet Explanation:**

He will be afflicted with numberless diseases, who eats immoderately, ignorant (of the rules of health).

**குறள் 987:**

**இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

துன்பமானவற்றைச் செய்தவர்க்கும் இனிய உதவிகளைச் செய்யா விட்டால் , சான்றோரின் சால்பு என்ன பயன் உடையதாகும்.

**English Couplet 988:**

**To soul with perfect virtue's strength endued,**
**Brings no disgrace the lack of every earthly good.**

**Couplet Explanation:**

Poverty is no disgrace to one who abounds in good qualities.

**குறள் 988:**

**இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்**
**திண்மைஉண் டாகப் பெறின்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சால்பு என்னும் வலிமை உண்டாகப் பெற்றால் ஒருவனுக்குப் பொருள் இல்லாத குறையாகிய வறுமை இழிவானது அன்று.

**English Couplet 989:**

**Call them of perfect virtue's sea the shore,**
**Who, though the fates should fail, fail not for evermore.**

**Couplet Explanation:**

Those who are said to be the shore of the sea of perfection will never change, though ages may change.

**குறள் 989:**

**ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சால்பு என்னும் தன்மைக்குக் கடல் என்று புகழப்படுகின்றவர் , ஊழிக்காலத்தின் வேறுபாடுகளே நேர்ந்தாலும் தாம் வேறுபடாமல் இருப்பர்.

**English Couplet 990:**

**The mighty earth its burthen to sustain must cease,**
**If perfect virtue of the perfect men decrease.**

**Couplet Explanation:**

If there is a defect in the character of the perfect, (even) the great world cannot bear (its) burden.

**குறள் 990:**

**சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்**
**தாங்காது மன்னோ பொறை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

சான்றோரின் சால்பு நிறைந்த பண்பு குறைபடுமானால் இந்தப் பெரிய நிலவுலகமும் தன் பாரத்தைத் தாங்க முடியாமற் போய் விடும்.

**அதிகாரம்: பண்புடைமை**

**Chapter: Courtesy**

**English Couplet 991:**

**Who easy access give to every man, they say,**
**Of kindly courtesy will learn with ease the way.**

**Couplet Explanation:**

If one is easy of access to all, it will be easy for one to obtain the virtue called goodness.

**குறள் 991:**

**எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்**
**பண்புடைமை என்னும் வழக்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பண்பு உடையவராக வாழும் நல்வழியை , யாரிடத்திலும் எளிய செவ்வியுடன் இருப்பதால் அடைவது எளிது என்று கூறுவர்.

**English Couplet 992:**

**Benevolence and high-born dignity,**

**These two are beaten paths of courtesy.**

**Couplet Explanation:**

Affectionateness and birth in a good family, these two constitute what is called a proper behaviour to all.

**குறள் 992:**

**அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்**

**பண்புடைமை என்னும் வழக்கு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

அன்புடையவராக இருத்தல் , உயர்ந்த குடியில் பிறந்த தன்மை அமைந்திருத்தல் ஆகிய இவ் விரண்டும் பண்பு உடையவராக வாழும் நல்வழியாகும்.

**English Couplet 993:**

**Men are not one because their members seem alike to outward view;**

**Similitude of kindred quality makes likeness true.**

**Couplet Explanation:**

Resemblance of bodies is no resemblance of souls; true resemblance is the resemblance of qualities that attract.

**குறள் 993:**

**உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க**

**பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புமை அன்று , பொருந்தத்தக்கப் பண்பால் ஒத்திருத்தலே கொள்ளத்தக்க ஒப்புமையாகும்.

**English Couplet 994:**

**Of men of fruitful life, who kindly benefits dispense,**

**The world unites to praise the 'noble excellence'.**

**Couplet Explanation:**

The world applauds the character of those whose usefulness results from their equity and charity.

**குறள் 994:**

**நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்லப் பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

**English Couplet 995:**

**Contempt is evil though in sport. They who man's nature know,**
**E'en in their wrath, a courteous mind will show.**

**Couplet Explanation:**

Reproach is painful to one even in sport; those (therefore) who know the nature of others exhibit (pleasing) qualities even when they are hated.

**குறள் 995:**

**நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்**
**பண்புள பாடறிவார் மாட்டு.**

**மு.வரதராசன் விளக்கம்:**

ஒருவனை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும் , பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிலும் நல்லப் பண்புகள் உள்ளன.

**English Couplet 996:**

**The world abides; for 'worthy' men its weight sustain.**
**Were it not so, 'twould fall to dust again.**

**Couplet Explanation:**

The (way of the) world subsists by contact with the good; if not, it would bury itself in the earth and perish.

**குறள் 996:**

**பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்**
**மண்புக்கு மாய்வது மன்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பண்பு உடையவரிடத்தில் பொருந்தியிருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகின்றது, அஃது இல்லையானால் மண்ணில் புகுந்து அழிந்து போகும்.

**English Couplet 997:**

**Though sharp their wit as file, as blocks they must remain,**
**Whose souls are void of 'courtesy humane'.**

**Couplet Explanation:**

He who is destitute of (true) human qualities (only) resembles a tree, though he may possess the sharpness of a file.

**குறள் 997:**

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர் அரம் போல் கூர்மையான அறிவுடையவரானாலும், ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர்.

**English Couplet 998:**

**Though men with all unfriendly acts and wrongs assail,**
**'Tis uttermost disgrace in 'courtesy' to fail.**

**Couplet Explanation:**

It is wrong (for the wise) not to exhibit (good) qualities even towards those who bearing no friendship (for them) do only what is hateful.

**குறள் 998:**

**நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்**
**பண்பாற்றார் ஆதல் கடை.**

**மு.வரதராசன் விளக்கம்:**

நட்பு கொள்ள முடியாதவராய்த் தீயவைச் செய்கின்றவரிடத்திலும் பண்பு உடையவராய் நடக்க முடியாமை இழிவானதாகும்.

**English Couplet 999:**

**To him who knows not how to smile in kindly mirth,**

**Darkness in daytime broods o'er all the vast and mighty earth.**

**Couplet Explanation:**

To those who cannot rejoice, the wide world is buried darkness even in (broad) day light.

**குறள் 999:**

**நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன்று இருள்.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பிறரோடு கலந்து பழகி மகிழ முடியாதவர்க்கு , மிகப் பெரிய இந்த உலகம் ஒளியுள்ள பகற் காலத்திலும் இருளில் கிடப்பதாம்.

**English Couplet 1000:**

**Like sweet milk soured because in filthy vessel poured,**

**Is ample wealth in churlish man's unopened coffers stored.**

**Couplet Explanation:**

The great wealth obtained by one who has no goodness will perish like pure milk spoilt by the impurity of the vessel.

**குறள் 1000:**

**பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்**
**கலந்தீமை யால்திரிந் தற்று.**

**மு.வரதராசன் விளக்கம்:**

பண்பு இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம் , வைத்த கலத்தின் தீமையால் நல்ல பால் தன் சுவை முதலியன கெட்டாற் போன்றதாகும்.